**அரசாங்க அறிவித்தல்**

**முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**

**தேசிய அல் குர்ஆன் கிறாஅத், மனனப் போட்டிகளும் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றுவதற்காக போட்டியாளர்களை தெரிவு செய்தலும் - 2018**

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் 2018 ஆம் ஆண்டிற்கான தேசிய ரீதியிலான அல் குர்ஆன் ஓதல் (கிராஅத்), அல் குர்ஆன் மனனம் ஆகிய போட்டிகள் எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கொழும்பில் நடாத்தப்படவுள்ளன. இப்போட்டிகள் பின்வரும் ஏழு பிரிவுகளாக நடைபெறும். ஒவ்வொரு பிரிவுகளிலும் முதல் 10 இடங்களைப் பெறுபவர்களுக்கு பணப்பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதுவராலயங்கள் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றுவதற்கான விண்ணப்பங்கள் கோரும்பட்சத்தில் மாத்திரம் வயதெல்லையை, போட்டி நிகழ்ச்சிகளையும் கவனத்திற்கொண்டு ஒழுங்கு விதிகளுக்கமைய போட்டியாளர்கள் சிபாரிசு செய்யப்படுவர்.

விண்ணப்பதாரி ஏற்கனவே சர்வதேச போட்டியொன்றில் பங்குபற்றியிருந்தால் அவர் பங்கு பற்றிய வருடத்திலிருந்து தொடர்ந்து ஐந்து வருடங்களுக்கு மேற்கூறப்பட்ட போட்டிகளில் பங்கு பற்ற முடியாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

**போட்டி விபரங்கள் பின்வருமாறு:**

**01. முதலாம் பிரிவு :-** **அல் குர்ஆன் ஓதல் (கிராஅத்) போட்டி**

ஆண்: 14 – 18 வயதிற்குட்பட்டவர்கள்.

அல்குர்ஆனை இனிமையாகவும், தஜ்வீத் முறைப்படியும் ஓதுதல் வேண்டும். 2018 ஜனவரி 01ம் திகதி 14 வயதுக்கு மேற்பட்டவராகவும் 18 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**02. இரண்டாம் பிரிவு :-** **அல் குர்ஆன் ஓதல் (கிராஅத்) போட்டி**

ஆண்: 18 – 40 வயதிற்குட்பட்டவர்கள்.

அல்குர்ஆனை இனிமையாகவும், தஜ்வீத் முறைப்படியும் ஓதுதல் வேண்டும். 2018 ஜனவரி 01ம் திகதி 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 40 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**03. மூன்றாம் பிரிவு :-** **அல் குர்ஆன் ஓதல் (கிராஅத்) போட்டி**

பெண்: 14 – 18 வயதிற்குட்பட்டவர்கள்.

அல்குர்ஆனை இனிமையாகவும், தஜ்வீத் முறைப்படியும் ஓதுதல் வேண்டும். 2018 ஜனவரி 01ம் திகதி 14 வயதுக்கு மேற்பட்டவராகவும் 18 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**04. நான்காம் பிரிவு :-** **அல் குர்ஆன் ஓதல் (கிராஅத்) போட்டி**

பெண்: 18 – 40 வயதிற்குட்பட்டவர்கள்.

அல்குர்ஆனை இனிமையாகவும், தஜ்வீத் முறைப்படியும் ஓதுதல் வேண்டும். 2018 ஜனவரி 01ம் திகதி 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 40 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**05. ஐந்தாம் பிரிவு:- அல்குர்ஆன் மனனப் போட்டி (ஹிப்லுல் குர்ஆன்)**

ஆண்: 13 – 18 வயதிற்குட்பட்டவர்கள்.

அல்குர்ஆனை தஜ்வீத் முறைப்படி மனனமாக ஓதக்கூடியவராக வேண்டும். 2018 ஜனவரி 01ம் திகதி 13 வயதுக்கு மேற்பட்டவராகவும் 18 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**06. ஆறாம் பிரிவு:- அல்குர்ஆன் மனனப் போட்டி (ஹிப்லுல் குர்ஆன்)**

ஆண்: 18 – 40 வயதிற்குட்பட்டவர்கள்.

அல்குர்ஆனை தஜ்வீத் முறைப்படி மனனமாக ஓதக்கூடியவராக வேண்டும். 2018 ஜனவரி 01ம் திகதி 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 40 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**07. ஏழாம் பிரிவு :- அல்குர்ஆன் மனனப் போட்டி (ஹிப்லுல் குர்ஆன்)**

பெண்: 13 – 30 வயதிற்குட்பட்டவர்கள்.

அல்குர்ஆனை தஜ்வீத் முறைப்படி மனனமாக ஓதக்கூடியவராக வேண்டும். 2018 ஜனவரி 01ம் திகதி 13 வயதுக்கு மேற்பட்டவராகவும் 30 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

பின்வரும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தத்தமது விண்ணப்பத்தினை பள்ளிவாசல் கதீப்/கிராம சேவகர்/பாடசாலை அதிபர்/பதவிநிலை உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.

அரபுக் கலாசாலை/ஹிப்ளுல் குர்ஆன் மத்ரஸா என்பன மூலம் விண்ணப்பிக்கும் விண்ணப்பப்பத்திரத்தை அந்நிறுவனத்தின் அதிபர் உறுதிப்படுத்தி அனுப்புதல் வேண்டும். மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திலிருந்தும் இரு போட்டியாளர்கள் மாத்திரமே ஒவ்வொரு போட்டியிலும் மற்றும் ஒரு விண்ணப்பதாரி ஏதேனும் ஒரு போட்டியில் மாத்திரமே பங்குபற்றலாம். அத்துடன் மேற்படி நிறுவனங்களில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்கள் எந்தவொரு காரணத்தினாலும் தனிப்பட்ட விண்ணப்பதாரியாக விண்ணப்பிக்க முடியாது.

**வயதை உறுதிப்படுத்தப்படுத்துவதற்காக அத்தாட்சிப்படுத்தப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழ் பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.அத்துடன் போட்டியின் போது தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களாகிய தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு/ அத்தாட்சிப்படுத்தப்பட்ட புகைப்பட பிரதி ஆகியவற்றில் ஏதேனும் ஒரு ஆவணத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.**

விண்ணப்பங்கள் A4 தாளில் மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் **“தேசிய அல்குர்ஆன் ஓதல் (கிராஅத்/மனனப் போட்டிகள் 2018”** எனக் குறிப்பிட்டப்பட்டு பணிப்பாளர், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், இல 180, ரீ.பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு – 10 என்ற முகவரிக்கு **2018 ஜனவரி 28ம்** திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். **(பெக்ஸ், ஈமெயில், மற்றும் நேரடியாக சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).**

இவ்விண்ணப்பபடிவத்தினை www.muslimaffairs.gov.lk எமது இணையத்தள முகவரி மூலமும் பெற்றுக் கொள்ளலாம்.

எம்.ஆர்.எம். மலிக்
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
180, டி.பி. ஜாயா மாவத்தை
கொழும்பு – 10.

## மாதிரி விண்ணப்பப்படிவம்

### தேசிய ரீதியிலான அல்-குர்ஆன் கிராஅத், மனனப் போட்டிகள்-2018

| பங்குபற்றும் போட்டியின்<br>பிரிவு: ……………………… இலக்கம்: …… | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|

01. முழுப்பெயர் (ஆங்கிலத்தில்): ………………………………………………………………………………

02. விலாசம் (ஆங்கிலத்தில்) : ………………………………………………………………………………

03. தொலைபேசி இலக்கம் : ……………………………………………

04. பிறந்த திகதி : ……………………………………………

(2018.01.01 ஆம் திகதியன்று வயது) வருடம்: …………… மாதம்: …………… நாள்: …………..

அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிறப்புச்சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது :- ஆம்/இல்லை

05. பால் (ஆண் / பெண்) : ………………………

06. பங்குபற்றும் போட்டி : ………………………………………………………………………………

07. பிரிவு : ………………………………………………………………………………

08. கிராஅத் ஓதல் / மனனம் சம்பந்தமாக சர்வதேச போட்டிகளில் பங்குபற்றியிருந்தால் அது பற்றிய வருடமும் போட்டி சம்பந்தமான விபரமும்:

…………………………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………………………

…………….ஆம் திகதி தினகரன், நவமணி பத்திரிகைகளின் விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக இவ்விண்ணப்பம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதையும் விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

……………………  …………………………………

திகதி  விண்ணப்பதாரியின் கையொப்பம்

மேலே குறிப்பிட்ட விண்ணப்பதாரி தனக்கு நன்கு அறிமுகமானவர் என்றும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………  ………………………………………

திகதி  உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும் இறப்பர் முத்திரையும்